(6 pages) Reg. No. : .......................

**Code No. : 22104** **Sub. Code : R 3 TA 53**

B.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2011.

Fifth Semester

Part III — Tamil – Main

Paper IX — தமிழக வரலாறும் பண்பாடும்

(For those who joined in July 2008 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மலையும் மலை சார்ந்த நிலப்பகுதியும் எவ்வாறு அழைக்கப்பெற்றது?

(அ) நெய்தல் நிலம் (ஆ) முல்லை நிலம்

(இ) குறிஞ்சி நிலம் (ஈ) மருதம்

2. ஆதிச்ச நல்லூர் எங்குள்ளது?

(அ) மதுரை மாவட்டம்

(ஆ) தேனி மாவட்டம்

(இ) திருநெல்வேலி மாவட்டம்

(ஈ) வளநாடு

3. இருண்ட காலத் தமிழகம் என்று அழைக்கப்படுவது

(அ) பல்லவர் காலம் (ஆ) களப்பிரர் காலம்

(இ) சோழர் காலம் (ஈ) பாண்டியர் காலம்

4. களப்பிரர் போற்றி வளர்த்த மொழி

(அ) பிராகிருதம் (ஆ) வட்டெழுத்து

(இ) பாலி (ஈ) உருது

5. ஆட்சி முறையில் குடவோலை முறையைப் புகுத்தியவர்

(அ) பாண்டியர் (ஆ) பல்லவர்

(இ) சோழர் (ஈ) சேரர்

6. கங்கை கொண்ட சோழன் என்ற சிறப்பிற்குரியவன்

(அ) இராசராசன் (ஆ) அதிராசேந்திரன்

(இ) இராசேந்திரன் (ஈ) பராந்தகன்

7. பாண்டியர்களின் இரண்டாம் பேரரசின் எழுச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியவன்

(அ) முதலாம் மாற வர்மன் சுந்தரபாண்டியன்

(ஆ) சடைய வர்ம குல சேகரன்

(இ) இரண்டாம் மாற வர்மன்

(ஈ) முதலாம் சடையவர்ம சுந்தர பாண்டியன்

8. தஞ்சை சரசுவதி மகாலை ஒரு பலதுறை ஆய்வுக் கூடமாக உருவாக்கியவன்

(அ) திருமலை நாயக்கர் (ஆ) இரண்டாம் சரபோஜி

(இ) வெங்காஜி (ஈ) சிவாஜி

9. வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டவர்

(அ) அண்ணா (ஆ) காமராசர்

(இ) கண்ணதாசன் (ஈ) பெரியார்

10. கல்விக்கண் திறந்தவர் என்ற புகழுக்குரியவர்

(அ) கருணாநிதி

(ஆ) ஓமந்தூர் இராமசாமியார்

(இ) காமராசர்

(ஈ) இராஜாஜி



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) குமரிக் கண்டம் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழக குறுநில மன்னர்கள் குறித்து எழுதுக.

12. (அ) களப்பிரர்கள் குறித்த வரலாற்றுச் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) மாமல்லபுரக்குகைக் கோவில்கள் – குறிப்புத் தருக.

13. (அ) இராசராசன் பெற்ற வெற்றிகள் யாவை?

(அல்லது)

(ஆ) சோழர்களின் இலக்கியத் தொண்டினை விளக்கி எழுதுக.

14. (அ) மாலிக்காபூர் படையெடுப்பு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாயக்கர் காலக் கலை வளர்ச்சி பற்றி எழுதுக.

15. (அ) நீதிக்கட்சியின் சாதனைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சி.என். அண்ணாதுரை சிறுகுறிப்பு வரைக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களில் விடை தருக.

16. (அ) முச்சங்கங்கள் குறித்த செய்திகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சேர அரசர்கள் பற்றி விவரிக்க.

17. (அ) களப்பிரர்காலத் தமிழகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பல்லவர் வரலாற்றில் முதல் மகேந்திர வர்மன் பெறுமிடம் குறித்து எழுதுக.

18. (அ) சோழப் பேரரசின் உச்சநிலையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழர் காலக் கலைகள் பற்றிக் கட்டுரைக்க.



19. (அ) நாயக்கர் காலச்சமயம் வளர்ந்த தன்மையினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் மராட்டியர் ஆட்சியின் தோற்றமும் வீழ்ச்சியும் பற்றி விவரிக்க.

20. (அ) தமிழகத்தில் சமய சமூக சீர்திருத்த இயக்கங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் தேசியக்கட்சிகள் குறித்து ஆராய்க.

———————